உ

சிவமயம்

நேரிசை வெண்பா

வேழ முகத்தோய்! விநாயகனே!! பெம்மானே!!!
சூழும் துயர்கள் துடைத்தெம்மை – ஆள்வோனே
நாளும் பொழுதும் நல்லசுகந் தந்தெங்கள்
வாழ்வை வளமாக்கு வந்து.




துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
கச்சாய் – கொடிகாமம் வாசியுமாகிய

அண்ணல் திரு. வல்லிபுரம்

# குணரத்தினம்

(இ. போ. ச. சாலைப் பரிசோதகர் – கோண்டாவில்)

அவர்களின் அகால மரணம் குறித்த

# நினைவு மலர்

தோற்றம்: **13-05-1940** மறைவு: **24-06-1984**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இம் மலரை
அமரத்துவம் அடைந்த
எங்கள் அன்புக் குடும்பக்
குலதெய்வம் அண்ணல்
திரு. வ. கன்கரத்தினம்
அவர்கட்கு எங்கள் உளங்கனிந்த
இன்ப அன்புச் சமர்ப்பணமாக்
குகின்றோம்.

மனைவி, மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்துவம் அடைந்த அண்ணல்

# திரு. வ. கனகரத்தினம் அவர்கள்



## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு இரத்தாக்ஷி ஆனி அபரபக்கம்
பூண்டதிதி ஏகா தசிதன்னில் — நீண்டபுகழ்
எம்மான் கனக இரத்தினம் எம்மை நீங்கிப்
பெம்மான் அடிசேர்ந்தான் பெட்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் / தகவுடை அதிகாரியின்

# ஆசி உரை

எமது சபையின் சேவையில் கடந்த 18 ஆண்டுகளாகக் கடமையாற்றி 1984-06-24ந் திகதி எதிர்பாராத விதமாகத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அகால மரணமடைந்த திரு. வல்லிபுரம் கனகரத்தினம் அவர்களின், துயரச் செய்திகேட்டு ஆற்றொணுத் துயரடைகிறேன். எமது சபையின் வளர்ச்சிக்காக அல்லும்பகலும் திறம்படச் சேவையாற்றிச் சாலைப் பரிசோதகராகக் கடமையின்போதே துர்பாக்கிய நிலை அடைந்தமைக்கு எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. இவரது பிரிவு எமது சபைக்கு அளப்பரிய பேரிழப்பாகும். இவர் கிராம மக்களுக்கும், நாட்டிற்கும் ஆற்றிய சேவை எமது உள்ளத்தினின்றும் நீங்கா நிலை பெற்றுள்ளதை இங்கு விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவரைப் பிரிந்து கண்ணீரும், கம்பலையுமாகத் துயருறும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்களின் நிலை உணர்ந்து நாமும் வேதனை அடைகின்றோம். இவரது ஆத்மா சாந்தியடையவும், மனைவி, மக்கள் பாதுகாக்கப்பட்டு சீரும், சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சக்தி! சக்தி! சக்தி!

சி. கனகரத்தினம்
சமாதான நீதவான்,
உத்தியோகப்பற்றற்ற நீதிபதி,
அரச-தரப்பு வழக்கறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை
பொது முகாமையாளரின்

# இரங்கலுரை

அமரர் வல்லிபுரம் கனகரத்தினம் அவர்களை கடந்த பல ஆண்டுகளாக அறிவேன். ஆயினும் அன்னார் 1966ம் ஆண்டு சபையின் சேவையில் சேர்ந்த பின்னர் நான் அவரின் குணாதிசயங்களை நேரில் கண்டு வியந்திருக்கின்றேன். இளவயதில் காலன் இவர் உயிரைக் கவர்ந்துவிட்டதுபற்றி சபை ஊழியர்கள் மட்டுமல்ல, இவர்வதியும் கிராம மக்களும் அளவொணாத் துயருற்றனர். சுருங்கக் கூறின் இவர் ஓர் சமூக சேவையாளர். யார், யாருக்கு இன்னல் ஏற்பட்டாலும் அவற்றைக் களைவதற்கு சிறிதேனும் பின் நிற்காதவர்.

கடமையே கண்ணாக வாழ்ந்த இவரின் வாழ்வு, கடமைக்காக வரும் நேரத்தில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்ச்சியால் திடீரென முடிந்து விட்டது. தான் கடமையாற்றிய சபையிலும், தான் வதியும் இடத்திலும், மக்களின் ஏகோபித்த அன்பையும், ஆதரவையும் பெற்ற இவரின் மரணச் செய்தி கேட்டு துன்புறாதவர் எவரும் இல்லையெனலாம்.

நாற்பத்தி நாலு வயதில் இவ்வுலக வாழ்வை நீத்த அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் மனைவி, மக்கள் உற்றார், உறவினர் யாவர்க்கும் எனது உளமார்ந்த அனுதாபங்களை என்சார்பிலும், சபை ஊழியர்கள் சார்பிலும் தெரிவித்துக்கொண்டு அமரரின் ஆத்மா சாந்தியடையவும், அவரின் மனைவி, மக்கள் மாண்புற வாழவும் வழிகாட்ட வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இ. இராசேந்திரன்
பொது முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூழியன்

யாழ்சாலை, திறமையுள்ள பண்புமிக்க ஒரு சாலைப் பரிசோதகரை இழந்து விட்டது. இது ஒரு பேரிழப்பு. திரு. வ. கனகரத்தினம் இ. போ. ச.வில் நடத்துனராகச் சேர்ந்து அவரின் உழைப்பாலும் திறமையாலும் சாலைப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றவர். இவர் கிளிநொச்சி, பருத்தித்துறை சாலைகளில் கடமையாற்றி இறுதியாக யாழ்சாலையில் கடமையாற்றினார்.

இவர் சகஊழியர்களின் குறைகளை மேலதிகாரிகளுக்கு எடுத்துரைத்து தீர்த்து வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்பவர். இவரின் சாந்தரூபம், உற்சாகமான பேச்சு, சுய அடக்கம் மற்றவர்கள் மீது அன்பு செலுத்துதல் போன்ற உத்தம குணங்களால் சக ஊழியர்கள் கவரப் பட்டார்கள். திடீரென ஏற்பட்ட அகால மரணத்தால் அவர்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளார்கள்.

இவரது மனைவி மக்கள் இவரை இழந்து தவிக்கின்றார்கள். அவர்களுக்கு அவரைத் தேடி அரவணைத்த இறைவன்தான் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அவரது ஆத்மா சாந்திபெறுவதாக.

க. மயில்வாகனம்
செயலாற்று முகாமையாளர்
வடபிராந்திய போக்குவரத்துச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

அமரர் வல்லிபுரம் கனகரத்தினம் 1966ம் ஆண்டு வைகாசி மாதம் 21ந் திகதி இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நடத்துனராக நியமிக்கப்பட்டார். அன்னார் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்குணங்களை அணிகலனாகக் கொண்டு யாவரும் போற்றும் வண்ணம் சேவை புரிந்து வந்தார்.

அன்னார் 1978-06-01ஆம் திகதி முதல் சாலைப் பரிசோதகராகப் பதவி உயர்த்தப் பட்டு அப்பதவியிலும் அன்னார் தமது சேவைகளைத் திறம்பட அளித்துவந்தார். இவரின் இழப்பு இவரின் குடும்பத்திற்கு மட்டுமல்ல முழுச் சபைக்கும் ஏற்பட்ட நட்டமாகும்.

இவ்வாண்டு ஆனி மாதம் 24ந் திகதி அமரர் கனகரத்தினம் கடமைக்கு வந்து கொண்டிருந்த வேளையில் அகால மரணமெய்தினார். இவரின் மரணச் செய்தி கேட்டு முழு வடபிராந்திய போக்குவரத்துச் சபையுமே துயரத்தில் ஆழ்ந்தது.

இவரின் இழப்பால் துயருறும் மனைவி, மக்கள் மற்றும் உற்றார் உறவினர் யாவருக்கும் எனது சார்பிலும் யாழ் சாலை ஊழியர்களின் சார்பிலும் மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பா. உ. மகாலிங்கம்
யாழ் சாலை முகாமையாளர்
கோண்டாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற

## அண்ணல் வல்லிபுரம் கனகரத்தினம்

(இ. போ. ச. சாலைப் பரிசோதகர் - கோண்டாவில்)

அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் துன்னாலை தெற்கு கரவெட்டியில் வாழ்ந்தவர் புகழ்பூத்த குடும்பத்தின் வழித்தோன்றல் திரு. சபாபதியார் வல்லிபுரம் அவர்கள். இவர் அவ்வூர் நாராயணபிள்ளை மகள் முத்துப்பிள்ளையைத் திருமணம் செய்து,

கந்தையா — திருமணமாகாதவர்
தங்கம்மா — ஜெயராசா தபாலதிபர் அவர்களின் மனைவி
கனகரத்தினம் - நடைமுறை

ஆகிய குழந்தைகளைப் பெற்றார். இவர்களுள் அமரத்துவம் அடைந்த அண்ணல் திரு. கனகரத்தினம் அவர்கள் தமது கல்விப் பேற்றை கட்டைவேலி ஞானசாரியார் ஆங்கிலப் பாடசாலையில் இனிது நிறைவேற்றிய பின் இ. போ. ச. நடத்துனராக 07-05-1966ல் பதவி ஏற்றார். இவரின் திறமையால் 01-06-1978ல் சாலைப் பரிசோதகராகப் பதவி உயர்வைப் பெற்றார். இடையில் கொடிகாமம் கச்சாயூரில் சீருஞ் சிறப்புமாக வாழ்ந்த சின்னத்தம்பி கதிர்காமருக்கும் அவர்தம் மனைவி முத்துப்பிள்ளைக்கும் பிள்ளைகளாகப் பிறந்த தங்கம்மா, இராசையா, நல்லம்மா மகேஸ்வரி, இராசம்மா, யோகராசா ஆகியோரில் இளைய மகளான இராசம்மாவை 1967ல் திருமணம் புரிந்து இனிய தம்பதியராக வாழ்ந்துவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி தம்பதிகள் தமது இல்லற வாழ்வின் இனிய பயனாக கோமளா, சியாமளா, நரேந்திரன் ஆகிய அன்பு மழலைச் செல்வங்களைப் பெற்றனர். இல்லற வாழ்வு குடும்பப் பொறுப்பு இவைகளுக்கு மத்தியிலும் திரு. கனகரத்தினம் அவர்கள் தமது உறவினர், அயலவர், நண்பர் அனைவரினதும் தேவைகளுக்கு எப்பொழுதும் முகங் கொடுத்து ஆவன செய்வார். பொதுச் சேவைகளில் பொழுது இருண்டு விட்டதே என்று பாராது மிகவும் கூடுதலாக ஈடுபடுவார். இதனால் இவருக்கு நடைமுறை என்னும் சிறப்புப் பெயர் வழங்கி வரலாயிற்று.

இத்தகைய சேவையாளன் கடந்த 24-06-1984 ஞாயிற்றுக்கிழமை எதிர்பாராத நிகழ்ச்சியால் அகால மரணத்துக்குள்ளானார். அன்று மாலை ஏகாதசித் திதியும் அச்சுவினி நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் சொல்லாமல் கொள்ளாமல் சொர்க்கவுலகு எய்திவிட்டார். இவரின் பூதவுடம்பு அழிந்துவிட்டது. எனினும் புகழுடம்பு என்றும் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லோரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே"

—அறிஞர் வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னாலை தெற்கு சந்திரவளவைப் பிறப்பிடமாகவும்
கொடிகாமம் கச்சாயை வசிப்பிடமாகவும் கொண்ட
வ. பி. போ. சபை கோண்டாவில் சாலைப் பரிசோதகர்

## திரு. வல்லிபுரம் கனகரட்ணம் அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்த

# ஞாபகக் கவிகள்

## கச்சாய் உதய ஒளி அணைந்தது

நம்பமுடியவில்லை; எப்படி நம்பமுடியும்? எங்கள் முன் உமது ஒளியோ மறையவில்லை. ஆனால் நீரோ எங்களைவிட்டுப் பிரிந்துவிட்டீர் உம்மை நினைத்து நினைத்து இன்று எத்தனை உள்ளங்கள் வாடித் தவிக்கின்றன. உமது அன்பு மனைவியையும், பச்சிளங்குழந்தைகளையும் மறந்து காலன் வாழவிடாமல் குறுக்கே வந்து துப்பாக்கி முனையில் உயிரைப் பறித்துவிட்டான். உமது பூத உடல் அழிந்தாலும் 'நடைமுறை' என்னும் புகழுடம்பு அழியாது, என்றும் சுடர்விட்டு எரிந்துகொண்டே இருக்கும். மனித உடல் அழியும்; ஆனால் மனிதர் அழிவதில்லை. மாமனிதரான தங்களுக்கு அழிவேது. தாங்கள் அமரர். தங்களின் அன்புக்குரியவர்களான நாம் உங்களின் பிரிவால் கண்ணிலே நீர் எதற்கு என்பதைக் கண்டுபிடித்து விட்டோம் கவிஞர் கண்ணதாசன் சொன்னது சரி. "காலமெல்லாம் அழுவதற்குத்தான்"; சந்தேகமேயில்லை

## மனைவி இராசம்மா புலம்பல்

ஈர் பத்தினொடு மூவாண்டுப் பருவத்தில்
பார்ப்பனர்கள் பல்லோர் தம்முன்
எத்திசையும் போற்றிசைப்ப என்கழுத்தில்
மங்கல நாண் ஏற்றி வைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனெடு அம்மையவள் சான்ருக
அங்கி முனம் பிரியேன் என்றே
சித்தமுவந்(து) உரைத்தமொழி பொய்யாக
ஐயாநீ சென்ற தெங்கே.

ஆவிபோம் நிலையில் நின்றன்
ஆக்கையே கலங்கிற் றென்று
மேவிய துயரத் தோடு
மேன்மை சேர் கச்சாய்னின்று
கூவியே வந்த நின்தன்
நண்பர்கள் அனைவரும் தான்
ஆவிபோம் பொழுது இல்லாத
தாற்றவே முடியா தந்தோ

சிறகிழந்த பறவையைப்போல் ஆகிவிட்டேன்
சிதைவடைந்த சித்திரம் போல் மாறிவிட்டேன்
நிறைவானின் பயனிழந்த பயிர்போல் ஆனேன்
நிலவில்லா வானம் போல் ஆகிவிட்டேன்
குறையேதும் காணுமல் வாழ்ந்த வாழ்வு
குவலயத்திற் கனவாகிப் போனதந்தோ
நிறைகுணத்தின் உத்தமனே என்றன் வாழ்வில்
நினைப்பிரிந்த துயர்போமோ அந்தோ! அந்தோ!!

**மக்கள் கோமளா, சியாமளா, நரேந்திரன்**
**புலம்பல்**

பக்கலி லிருந்தி நீயும்
பாங்குடன் உண்டி தந்து
மக்கள் நீர் பிரிவில்லாமல்
வாழ்ந்திட வேண்டு மென்று
மிக்க வன்புடனே சொன்ன
மீதுயர் வசனந் தன்னை
எக்கணந் தனிலு மெண்ணில்
எந்தையே முன்னிற்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைதனில் அடுக்கியுனைக் கனலாற் சுட்டுக்
கடலினிலே சாம்பரெனக் கரைத் திட்டாலும்
விட்டகல வில்லையுன்றன் அழகுத் தோற்றம்
விரைவுகின்ற குமிண்சிரிப்பும் ஒருங்கே சேர்ந்து
கட்டழகு மாருத கருணை யூற்ருய்
கனகமதி போல் நின்று காலுகின்ருய்
எட்டட்டும் நின்ஆத்மா இறைவன் பாதம்
இறைஞ்சுகிருேம் சாந்திக்காய் இவனுறைந்தே

## உறவினர் புலம்பல்

உனைப்பிரிந்தோம் ஓங்குபுகழ் கனகரத்தின உறவினனே
ஒப்பரிய உன்சேவை எங்குக் காண்போம்
உனக்கிருக்கும் பொறுப்புகளை உலகிலினியார் தான்காப்பர்
உத்தமனே உத்தமனே என்றுசொல்லி உறவோ ரெல்லாம்
தனதுதனக் குரியமுறை தழல்நெய்போல் உருகச்சொல்லி
தகவுடையோய் நடைமுறையே தலைவா என்று
நினைந்துநினைந் தழுதழுது நேசனவன் செய்தசெயல்
நினைவுகூர்ந்து நித்தமும்நீர் சொரிகின்ருர் கண்ணீருருய்

## வ. பி. போ. சபை ஊழியர் பிரலாபம்

மெல்லியதாய்க் கதைத்திருந்தோம் கவலைதீர
விரைவினிலே தொழில் விடுவேன் என்றுசொன்ன
சொல்லிய உன் வார்த்தைதனை காலைகேட்டு
சோர்வகன்று மகிழ்ச்சியொடு இருக்க மாலை
ரெலிபோன் அறிவிப்பால் நீயிறந்த செய்தியினை
கேட்டதுமே திடுக்கிட் டோமே
உன் வெம்பிர ராஷ வாசல்
வேண்டு சிறுபால் விடவும் விதியற்ருேமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம்விளங்கு புகழோடு குடும்பம் காக்கும்
குளிர்கால மரம்போல் இருந்தநீ ரன்று
அலைந்தோங்கி பாதகனின் துப்பாக்கிக் கிரையாகி
ஆனரின் பாதமதை அண்மினீரோ
கலங்காத உள்ள மெல்லாங் கலங்கியிங்கே
கதறு மொழி காதிடத்தே கேட்கிலாயோ
நலங்குலைந்து நம்மிதயம் தளர்ந்து போனோம்
நமக் கினியார் துணையையோ ஏங்கிறேமே

## நண்பர், ஊரவர் புலம்பல்

வானெலியால் தொலைபேசி தந்தி தன்னல்
வாய் மொழியால் உன்னுடைய மரண
வார்த்தை கேட்டோர் தானயன்றூர், தலைசுழன்றூர்,
தயங்கி நின்றூர் தாரணியில் இதுகொடுமை
கொடுமை என்றூர் பானுவை இளந்த தென்ன
பரிதவித்தார், பதறலுற்றூர், பாவையானூர்
சேனைமழை பொழிவதுபோல் கண்ணீர் சிந்தி
திடுக்கிட்டு சிந்தை நொந்துளறிறூரே

## தேற்றம்

அலைகடல் சூழ் புவனிதனில் காந்தியெங்கே!
அடிமருவும் கஸ்தூரி யம்மை யெங்கே!!
கலையமுதக் கடலுண்ட ஔவை யெங்கே!
கற்புடைய வாசுகிப்பெண் கடவு ளெங்கே!!
விலைமதியாப் பாரதத் தாய் ஈன்றெடுத்த
வீரமணித் தெய்வங்கள் எங்கே! எங்கே!!
தலைமகனும் கனகரட்ணம் மறைந்த தற்குத்
தயங்குவதேன் துயரமினித் தணிகு வீரே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கியோன்: இ. கந்தையா
வ. பி. போ. சபை கோண்டாவில் சாலை
கோண்டாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியாத மனிதகுல மாணிக்கம்

## சிறந்த செயல்வீரன் "நடைமுறை"யான்

# செம்மல் - வல்லிபுரம் கனகரத்தினம்

துன்னாலை தெற்கு "சந்திரவளவு" கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கச்சாய் வடக்கு வாசியுமாகிய திரு. வல்லிபுரம் கனகரத்தினம் அவர்கள் அமரத்துவம் அடைந்து மாதம் ஒன்று நிறைகின்றது மின்னமல் முழங்காமல் மழை வருவது உண்டு. ஆனால் மின்னமல் முழங்காமல் "கொள்ளை போல் வந்து கொடுமை விளைத்து வெள்ளம் வயலை விழுங்குவது" அருமையிலும் அருமை. இத்தகைய ஒரு நிலைமையைத்தான் கடந்த 24-6-1984 ஞாயிற்றுக்கிழமை கச்சாயூர் பெற்றது.

அன்று பிற்பகல் 2-00 மணியளவில் தமது சொந்த வீடாகிய "சந்திர வாசா"வில் இருந்து கடமைக்காகப் புறப்பட்ட திரு. வ. கனகரத்தினம் அவர்கள் அமரராகித்தான் வீட்டுக்கு மீண்டும் வருவார் என்று யார்தான் எண்ணினர். வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவிலில் சாலைப் பரிசோதகராகக் கடமை ஆற்றிய அண்ணல் கனகரத்தினம் அவர்கள் அன்று மாலை 3-00 மணியளவில் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து கோண்டாவில் பஸ் சாலைக்கு பணம் எடுத்துச் சென்ற பஸ்சில் சாலை ஊழியருடன் சென்றுகொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட தீவிரவாத இளைஞர் பொலிசார் கோஷ்டி மோதலில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு நிகழ்ச்சியில் சொல்லாமல் கொள்ளாமல் சுகவாழ்வு பெற்றுவிட்டார். ஆமாம், அது சுகவாழ்வுதான். தொல்லை நிறைந்துள்ள கடல்சூழ் உலகத்தில் எல்லையில்லா எழில் நிறைந்தது இலங்கைத் தீவு. இதுவும் இனிய கடல்சூழ் இலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையே இங்கு செந்தமிழ் மக்கள் சிறப்பாக குறிப்பாகப் பெரும்பான்மையாக வாழ்கின்ற இடம் வடபகுதியே. இப்பகுதியில் வாழ்பவர்கள் நாளும் பொழுதும் சாவோ வாழ்வோ என்ற சந்தேகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இத்தகைய ஒரு நிலையில் தமது இனிய இல்லத் துணைவி இராசம்மாவையும் இரண்டு பெண் மக்களையும் இளைய குழந்தை எட்டு வயது நரேந்திரனையும் இவ்வுலகில் தவிக்கவிட்டு ஏந்தல் கனகரத்தினம் அவர்கள் இறைவன் திருவடி அடைந்துவிட்டார். இது இவர்தம் குடும்பத்தவர்க்கு மட்டுமல்ல இவர் உற்றார் உறவினர் நண்பர்கள் யாபேர்க்கும் ஏற்பட்ட பேரிழப்பு ஆகும். ஏனெனில் இவரின் இனிய பொதுச் சேவைவை இனி நாம் எங்கே காணமுடியும். இரவுபகலாக இன்பியல் நிகழ்வுகளிலோ அன்றேல் துன்பியல் நிகழ்ச்சிகளிலோ கலந்து கொண்டு அந்நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தி வைக்கின்ற அவரின் அருமருந்தன்ன ஆற்றல்களை அவனியில் ஆர்தான் மறப்பர். அவரின் ஆற்றல்தமைப் பாராட்டி அவர்தம் உறவினர், அயலவர், நண்பர்கள் மட்டுமன்றி இ. போ. ச. வடபிராந்தியத்திலேயும் கூட அங்குள்ள ஊழியரும் அவரை "நடைமுறை" என்ற காரணப் பெயராலேயே எப்பொழுதும் அழைப்பர். அந்த 'நடைமுறை' இன்று எம்மை நடைமுறைப்படுத்த இல்லாது போய்விட்டார். என்செய்வோம். ஏக்கம், ஏக்கம், ஏக்கமே. எல்லாம் அவன் செயல் என மனம் ஆறுவோம். இவரின் சேவை இனியது. இவரின் குணங்கள் எங்கும் காணமுடியாதது. இவர் பிரிவு பொறுக்கமுடியாதது. இவர் மறக்கமுடியாத மனிதருள் மாணிக்கம். இவர் சேவை வாழ்க. இவர் குடும்பம் தழைக்க இறைவன் திருவருள் கூட்டுவானாக.

கச்சாயூர்ப் பண்டிதர் சுக - சிவரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற் கோயிலும் போனகமும் அருளி
சோதிமணி முடித்தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாணி னைப்பை யிருபோதும்
இதயவாரி திக்குள் உறவாகி
எனதுளேசி றக்க அருள்வாயே
கதிரகாம வெற்பில் உறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே.

## கந்தரனுபூதி

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்துஎனை யாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பாராயணப் பாடல்கள்

## தேவாரம்

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வைவைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல்வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

## திருவாசகம்

நானேயோ தவஞ் செய்தேன் சிவாய
நமவெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவ பெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி
விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத் திருவீழிமிழலை
வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம் குளிர என்கண்
குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

● கடந்த 26-6-84ல் நடைபெற்ற அந்திமக் கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபங்களை தெரிவித்தும் அமரர் அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்தும் கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்திய உற்றூர், உறவினர், நண்பர்கள், வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் மற்றும் அதிகாரிகள், ஊழியர் யாபேருக்கும், இரங்கல் உரையை நிகழ்த்திய பெரியோர்களுக்கும், அன்றைய தினமும் அதற்கு முன் இருதினமும் ஆகவேண்டிய அலுவல்களில் அயராது முன்னின்றுழைத்தோர்க்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி எமது துயரத்தைப் பகிர்ந்தோர்க்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

●● 24-7-84ல் நடைபெற்ற அந்தியேஷ்டிக்குச் சமூகமளித்துச் சிறப்பித்தவர்களுக்கும், இதற்குமுன் கீரிமலையிலும் இன்றைய இல்ல நிகழ்ச்சிகளிலும் உரிய கிரியைகளை நடாத்தி உதவிய வணக்கத்திற்குரிய அந்தணர்களுக்கும், இந்நிகழ்ச்சிகள் இனிது நிறைவேற பல்லாற்றானும் உதவிய அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

●●● இந் நினைவு மலரை ஒரு முழுமையான மலராக வெளிவர சிறந்த அமைப்பில் விடயதானங்களை விரும்பி எழுதி உதவிய பெரியோர்களுக்கும், அச்சேற்றியுதவிய சாவகச்சேரி திருக்கணித அச்சகத்தார்க்கும் எமது அன்பு நன்றிகள் உரித்தாகுக.

இவ்வண்ணம்
மனைவி, மக்கள்,
உறவினர்.

திருக்கணிதம் – சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org